தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
மயிலாடுதுறை

அ.சா.9 நாள் 23.07.2026

| | | | |
|---|---|---|---|
| SC. No. | 35/2025 | | |
| பெயர் | சிவகுமார் | த/பெ. | ரா.சிவ்யாரு |
| வயது | 45/2026 | தொழில் | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | | தாலுக்கா | |

**(எதிரிகள் ஆஜர், ).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

**முதல் விசாரணை** :-

நான் தற்போது கும்பகோணம் மேற்கு காவல் நிலையத்தில் காவல்துறையில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். 08.01.2024 அன்று வைத்தீஸ்வரன் கோவில் வட்ட காவல் ஆய்வாளர் பணியிலிருந்த போது நாங்கூர் வெள்ளாளர் தெரு, வீரப்பன் மகன் செல்வம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைக்கேற்ப வைத்தீஸ்வரன்கோவில் காவல் நிலைய குற்ற எண்.07/2024 இதச பிரிவுகள் 294 (b), 352, 353 r/w 3 (1) TNPPDL Act-ன் படி அன்றைய நிலைய GDO சிறப்பு உதவி ஆய்வாளர், பாலசுப்பிரமணியன் அவர்கள் வழக்கு பதிவு செய்துள்ளார். எனக்கு பார்வைக்கு வைத்ததை வழக்கு கோப்பை எடுத்து கொண்டு அன்றைய தினமே 20.30 மணிக்கு சம்பவ இடமான அண்ணம்பெருமாள் கோவில் பேருந்து நிறுத்தம் சென்று சாட்சிகள் வீரமணி, அகோரமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** ஆகும். மேலும் சாட்சிகளான செல்வம் முருகன், மதியழகன், முத்துகிருஷ்ணன், நாகராஜ், அகோரமூர்த்தி, வீரமணி ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளை விசாரித்த வகையில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரிகளை பிடிக்க தக்க புலன் வைத்த நிலையில் எதிரிகள் அன்னம்பெருமாள் கோயில் ஆர்ச் அருகே நின்று கொண்டிருப்பதாக கிடைத்த தகவலின் படி 09.01.2024 ஆம் தேதி 11.00 மணிக்கு சென்று பார்த்த போது எதிரிகள்

CJM, MAYILADUTHURAI.

அங்கிருந்த தப்பிக்க முற்பட்டவர்களே போலீஸ் பார்ட்டி சகிதம் வளைத்து பிடித்து விசாரிக்க எதிரிகள் பிரவீன்குமார், ஸ்ரீராம் ஆகியோர் குற்ற காரணம் கூறி கைது செய்து கைது செய்த விவரத்தை அவரது உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து மேலும் இளம் பிழையாளியான ராஜேஷ் என்பவரை கையகப்படுத்தி உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து நிலையம் கொண்டு வந்து முறையே பாராவசம் ஒப்படைத்து எதிரிகளான பிரவீன்குமார், ஸ்ரீராம் ஆகியோரை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். இளம்பிளையாழி ராஜேஷ் என்பவரை இளம்பிள்ளை இளம்பிழயாளி நீதி குழுமத்திற்கு அனுப்பி வைத்தோம். அரசு பேருந்து பக்கவாட்டு கண்ணாடிக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக சீர்காழி கிளை மேலாளர் அவர்களிடம் சேதர மதிப்பீடு செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் பாலசுப்பிரமணியனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும் எதிரி ஸ்ரீராம், பிரவீன் குமார் ஆகியோர் மீது இறுதி அறிக்கை 15.02.2024 –ம் தேதி தாக்கல் செய்து கனம் குற்றவியல் நீதிபதி மூலம் சீர்காழிக்கு அனுப்பி வைத்தேன். மேலும், இளம்பிழையாளி ராஜேஷ் என்பவருக்கு 15.02.2024 அன்று தனி இறுதி அறிக்கை தாக்கல் செய்து இளம்சிறார் நீதிமன்றம் நாகப்பட்டினத்திற்கு அனுப்பி வைத்தேன். இத்துடன் அன்றைய தினமே விசாரணையை முடித்து எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவுகள் 294(b), 352, 353, 3 (1) of TNPPDL Act–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

புகார் கொடுப்பதற்கு முன்பு சம்பவ இடத்தையும் பேருந்தையும் பார்வையிட்டேனா என்றால் பார்வையிடவில்லை. பேருந்தில் சேதமடைந்த கண்ணாடி துண்டுகளை கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரிதான். புகாரிலுள்ள சேதார மதிப்பும், சேதார சான்றிதழில் உள்ள சேதார மதிப்பும் வேறுபாடாக உள்ளது என்றால் சரிதான். சாட்சி வடிவேல் கிளை மேலாளர் போலீசார் உடைந்த கண்ணாடி துண்டுகளை டிப்போவிலலிருந்து வாங்கியிருந்தாக சொன்னால் அவ்வாறு நாங்கள் எதுவும் வாங்கவில்லை. அ.சா.1 புகார்தாரர் செல்வ முருகன் மற்றும் அ.சா.2 மதியழகன் போலீசார்

CJM, MAYILADUTHURAI.

தான் புகாரை எழுதியிருக்கிறார் என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அது சரியல்ல. அந்த புகாரில் ஓட்டுநரும், நடத்துனரும் கையெழுத்திட்டதாக அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார் என்று சொன்னால் கையொப்பம் இடவில்லை. சம்பவ நடந்த அன்றைய தினம் திமுக மற்றும் அதிமுக சேர்ந்த ஒட்டுநர், நடத்துநர் இடையே பிரச்சனை இருந்தது என்று சொன்னால் என் விசாரணையில் அவ்வாறு தெரிய வரவில்லை. திமுக மற்றும் அதிமுக சேர்ந்த ஓட்டுநர்கள் அன்றைய தினம் புகார் கொடுத்தனர் என்று சொன்னால் சரியல்ல. பார்வைமகசர் சாட்சிகள் வேறு வழக்கிற்காக வந்து இருந்த போது இவ்வழக்கில் கையெழுத்து பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் சொன்ன சாட்சியத்தில் அவ்வாறு சொல்லவில்லை. பேருந்தை சம்பவம் நடந்த பிறகு டிரிப் எடுக்காமல், டிப்போ எடுத்து சென்றதாக என் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் எந்த குற்றமும் செய்யவில்லை என்று வேறு வழக்கிற்காக விசாரணைக்கு அழைத்து வந்து வேண்டுமென்றே இந்த பொய்யான வழக்கை அவர்கள் மீது போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கான ஆவணங்கள் காவல் நிலையத்தில் இருந்து தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u> :-**

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.